


முதலமைச்சர் மு.க ஸ்டாலின் அவர்களின் ஆட்சி சிறப்பை விளக்கி பத்திரிகையாளர் இரா.குமார் எழுதிய நடையில் நின்றுயர் நாயகன் நூல் வெளியீட்டு விழா நேற்று முன்தினம் (20.11.2023) சென்னை, அடையாறு முத்தமிழ் பேரவை அரங்கத்தில் நடைபெற்றது. இதில் சட்டப் பேரவைத் தலைவர் மு.அப்பாவு, நிதி அமைச்சர் தங்கம் தென்னரசு, தயாநிதி மாறன் எம். பி., தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய தலைவர் பூச்சி எஸ்.முருகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட ஆர்.கே. பேட்டை ஒன்றியம் எஸ்.வி.ஜி.புரம் பெரியார் சமத்துவ புரத்தில் குடியிருக்கும் 6 குடும்பங்களுக்கு வீடுகளில் அத்தியாவாசிய பணிகள் மேற்கொள்ள கைத்தறி மற்றும் துணி நூல் துறை அமைச்சர் ராணிப்பேட்டை ஆர்.காந்திதனது சொந்த பணத்தில் தலா 50,000 வீதம் 3 லட்ச ரூபாய் திருவள்ளூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலையில் வழங்கினார். அருகில் ஒன்றிய கழக செயலாளர் பெ.பழனி உள்பட பலர் உள்ளனர்.

### கழக சட்டத்துறை சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா பேச்சுப் போட்டி!

## சட்டத்துறைச் செயலாளர் என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிக்கை!

சென்னை, நவ.22-

தமிழ்நாடு முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் அறிவுரைக்கிணங்க தி.மு.க. சட்டத்துறைச் சார்பில் "தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி 6வது மண்டல பேச்சுப் போட்டி குறித்து தி.மு.க. சட்டத்துறைச் செயலாளர், மூத்த வழக்கறிஞர் என்.ஆர். இளங்கோ, எம்.பி. அறிக்கை வருமாறு:-

"தமிழினத் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா"வினையொட்டி தி.மு.க. சட்டத்துறையின் சார்பில், சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் மூன்று ஆண்டுகளுக்குட்பட்ட இளம் வழக்கறிஞர்களுக்கான பேச்சு போட்டிகளை கீழே குறிப்பிட்டுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. போட்டிகள் தமிழில் மட்டுமே நடத்தப்படும்.

**போட்டிகளுக்கான தலைப்புகள்**

1. கலைஞரின் பார்வையில் சமூக நீதி - மாணவர்கள்
2. கலைஞரின் பார்வையில் மாநில சுயாட்சி - இளம் வழக்கறிஞர்கள்

மேற்சொன்ன இந்த தலைப்பினை ஒட்டியே போட்டியாளர்கள் ஐந்து நிமிடங்களுக்கு மிகாமல் தமிழில் பேசிட வேண்டும்.

மாநிலம் முழுதும் உள்ள சட்ட கல்லூரிகளை ஆறு மண்டலங்களாக பிரித்து, ஒவ்வொரு மண்டலத்தில் நடைபெறும் தேதி, இடம் ஆகியவை ஏற்கனவே அறிவிக்கப்பட்டது. அதில் 5 மண்டலங்களில் பேச்சுப் போட்டி நடைபெற்று முடிந்ததைத் தொடர்ந்து, தற்போது 6வது மண்டலப் பேச்சு போட்டி கீழே குறிப்பிடப்பட்டுள்ளவிவரத்தின்படி நடைபெறும்.

போட்டிகளுக்கான பரிசு விவரம். ஒவ்வொரு மண்டலத்திலும் முதல் பரிசு ரூபாய் 50,000/- தங்கப் பதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு - ரூபாய் 25,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 15,000/- தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 5,000/- வெண்கலப்பதக்கம், சான்றிதழ் வழங்கப்படும்.

இவ்வாறு ஒவ்வொரு மண்டலத்திலும் நடைபெறும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற முதல் மூன்று பரிசு பெற்றவர்களுக்கான (சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் இளம் வழக்கறிஞர்கள்) "மாநில அளவிலான இறுதிப் போட்டி" நீலாங்கரை, "ஆர்.கே.கன்வென்ஷன் சென்டரில்" நடைபெறும். அதற்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

மாநிலத்தில் உள்ள சட்டக் கல்லூரி முதல்வர்கள் தங்கள் கல்லூரியிலிருந்து பங்கு பெற விரும்பும் மாணவர்களின் பட்டியலினை, தங்கள் மண்டலத்தின் போட்டி நடைபெறும் நாளுக்கு முன்பு கீழே குறிப்பிடப்பட்டுள்ள "பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்களிடம்" ஒப்படைக்க வேண்டுகிறோம். தவிர்க்க முடியாத காரணங்களால் பெயர் அளிக்க முடியாத மாணவர்கள் போட்டி நடக்கும் இடத்தில் நேரடியாக உரிய அடையாள அட்டை அல்லது கல்லூரி முதல்வரின் அனுமதி கடிதத்துடன் கலந்து கொள்ளலாம்.

இறுதிப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெறும் சட்டக் கல்லூரி மாணவர்கள் மற்றும் வழக்கறிஞர்களுக்கு முதல் பரிசு ரூபாய் 1,00,000/- தங்கபதக்கம், சான்றிதழ், இரண்டாம் பரிசு -ரூபாய் 50,000/- வெள்ளிப்பதக்கம், சான்றிதழ், மூன்றாம் பரிசு ரூபாய் 30,000/- தாமிரப் பதக்கம், சான்றிதழ், இரண்டு ஆறுதல் பரிசு ரூபாய் 10,000/= வெண்கலப்பதக்கம், சான்றிதழ்.

பேச்சுப் போட்டி ஒருங்கிணைப்பாளர்கள்

கே.எஸ்.இரவிச்சந்திரன் சட்டத்துறை இணைச் செயலாளர் - 98400-22250, ஜெ.பச்சையப்பன் சட்டத் துறை துணைச் செயலாளர் - 98402-60178, கே.சந்துரு சட்டத் துறை துணைச் செயலாளர்-94440-06999.

கே.ஜே.சரவணன் தலைமைக் கழக வழக்கறிஞர் - 98410-57345

**6வது மண்டல பேச்சுப் போட்டி**

போட்டி நடைபெறும் தேதி, இடம் ஆகிய விவரங்கள்

போட்டியின் நடுவர்கள் - தலைமைக் கழக வழக்கறிஞர் சூர்யா வெற்றிகொண்டான், வழக்கறிஞர் நன்மாறன்.

25.11.2023 - (மாணவர்கள்) காலை 9.00 மணி - இடம் அரசு சட்டக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

1. அன்னை தெரசா சட்டக்கல்லூரி, புதுக்கோட்டை (தனியார்)
3. சாஸ்த்ரா பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
4. தனலட்சுமி சீனிவாசன் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி.
5. தமிழ்நாடு தேசிய சட்டப் பல்கலைக் கழகம், திருச்சிராப்பள்ளி

26.11.2023 - (வழக்கறிஞர்கள்) - காலை 9.00 மணி - திருச்சி, கரூர், அரியலூர், பெரம்பலூர், தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்கள் மற்றும் புதுச்சேரி, காரைக்கால் மாநிலங்களைச் சேர்ந்த பதிவு செய்து மூன்று ஆண்டுகளுக்கு மிகாமல் உள்ள இளம் வழக்கறிஞர்கள்.

இடம்: திருவாரூர், "கலைஞர் கோட்டம்"

இவ்வாறு என்.ஆர்.இளங்கோ எம்.பி. அறிவித்துள்ளார்.

# ஒழுங்கு நடவடிக்கை!

## தலைமைக் கழக அறிவிப்பு

கழக கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் குடியாத்தம் குமரன், கழகக் கட்டுப்பாட்டை மீறியும், கழகத்திற்கு அவப்பெயர் ஏற்படும் வகையிலும் செயல்பட்டு வந்ததால், அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பிலிருந்தும். தற்காலிகமாக நீக்கி (Suspension) வைக்கப்படுகிறார்.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 600 018
நாள்- 21.11.2023

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டக் கழக ஆலோசனைக் கூட்டம் நாளை (23-11-2023 வியாழக்கிழமை) மாலை 5 மணியளவில் சைதை பஜார் சாலையில் அமைந்துள்ள சென்னை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் நடைபெற உள்ளது.

எனவே இக்கூட்டத்தில் ஐந்து சட்டமன்றத் தொகுதிகளின் 'தொகுதி பொறுப்பாளர்கள்', மாவட்டக் கழக நிர்வாகிகள்,

பகுதி கழகச் செயலாளர்கள், ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஆகியோர் தவறாமல் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : கழக ஆக்கப் பணிகள்

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்,**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

### திருவள்ளூர் ஒன்றியம் முன்னாள் மாவட்ட பிரதிநிதி

# தொட்டிகலை ஜி.ஏழுமலை மறைவு!

திருவள்ளூர் நவ. 22-

திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் கிழக்கு ஒன்றியம் முன்னாள் ஊராட்சி ஒன்றிய ஒன்றிய குழு உறுப்பினரும் முன்னாள் ஊராட்சி செயலாளரும் முன்னாள் மாவட்ட பிரதிநிதியுமான கழக மூத்த முன்னோடி தொட்டிக்கலை ஜி.ஏழுமலை நேற்று அதிகாலை 3.15 மணியளவில் இயற்கை எய்தினார்.

அன்னாரின் உடல் தொட்டிகலை கிராமத்தில் உள்ள இல்லத்தில் வைக்கப்பட்டு திருவள்ளூர் மாவட்ட கழகத்தினர்கள் மற்றும் உறவினர்கள் நேரில் சென்று அஞ்சலி செலுத்தினார்கள்.

## கழகத்தினர் அஞ்சலி!



அன்னாரின் உடல் நேற்று மாலை 4.30 மணி அளவில் தொட்டிகலை கிராமத்தில் உள்ள இடுகாட்டில் உடல் அடக்கம் செய்யப்பட்டது. பிரிவால் வாடும் மனைவி ஏ. புஷ்பா, மகன்கள் ஏ.சுரேஷ், ஏ.கணேசன், மகள் ஜோதி மேகநாதன், மருமகள்கள் வாணிஸ்ரீ, அனிதா மற்றும் குடும்பத்தினருக்கு கழக நிர்வாகிகள் ஆழ்ந்த வருத்தங்களை தெரிவித்தனர்.

